# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைச் சிறுகைத்தொழில் மன்றம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம்

---

*(2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2010, சனவரி மாதம் 15 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** *II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 9.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைச் சிறுகைத்தொழில் மன்றம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம்**

[*2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஒ. 3/2007*

**1981 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, இலங்கைச் சிறுகைத் தொழில் மன்ற (கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கான தொரு சட்டம்**

*இலங்கைச் சிறுகைத்தொழில் மன்றம் 1981 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்கச் சட்டத்தால் கூட்டிணைக்கப்பட்டதாதலாலும் :* முன்னுரை.

இலங்கைச் சிறுகைத்தொழில் மன்றம்அதன் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் அதன் பெயரை மாற்றுவதற்கும் சொல்லப் பட்ட கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேலும் பயனுறுதி யுடன் நிறைவேற்றும் நோக்கத்திற்காக மேற்படி 1981 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்கச் சட்டத்திற்கு குறித்தசில திருத்தங்கள் செய்யப்படவேண்டுமெனத் தீர்மானித்துள்ளதாதலாலும்:

மேற்கூறப்பட்ட கூட்டுத்தாபனத்தின் முகாமைப் பேரவை மேற் கூறப்பட்ட தீர்மானத்திற்குப் பயனளிக்கும் நோக்கத்திற்காக மேற்கூறப்பட்ட சட்டத்திற்கு திருத்தங்கள் செய்யப்படவேண்டு மென வேண்டுகோள் விடுத்துள்ளதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம் 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைச் சிறுகைத்தொழில் மன்றம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** (1) (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1981 ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, இலங்கைச் சிறுகைத்தொழில் மன்ற (கூட்டிணைத்தல்) சட்டம் "இலங்கைச் சிறுகைத்தொழில் மன்ற (கூட்டிணைத்தல்) சட்டம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இலங்கைச் சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் மன்ற (கூட்டிணைத்தல்) சட்டம்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்திலும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்திலும் இத்தால் திருத்தப்படு கின்றது.

*1981 ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, இலங்கைச் சிறுகைத் தொழில் மன்ற (கூட்டிணைத்தல்) சட்டத்திற்கான பொதுத் திருத்தங்கள்.*

(2) ஏதேனும் ஒழுங்குவிதியில், விதியில், அறிவித்தலில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில், தொடர்பாடலில் அல்லது வேறு ஆவணத்தில், "இலங்கைச் சிறுகைத்தொழில் மன்ற (கூட்டிணைத் தல்) சட்டம்" பற்றிய குறிப்பீடு ஒவ்வொன்றும், இச்சட்டம் நடை முறைக்கு வருகின்ற தேதியிலிருந்து "இலங்கைச் சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் மன்றச் சட்டம்" என்பதனைப் பற்றிய குறிப் பீடொன்றாக வாசித்துப் பொருள்கொள்ளப்படுதல் வேண் டும்.

(3) முதன்மைச் சட்டவாக்கத்தில் அல்லது ஏதேனும் சட்ட ஆவணத்தில், அறிவித்தலில், ஒப்பந்தத்தில் அல்லது வேறு தொடர்பாடலில் ஏதேனும் "இலங்கைச் சிறுகைத்தொழில் மன்றத்தைப் பற்றிய குறிப்பீடு ஒவ்வொன்றும் இச்சட்டம் நடை முறைக்குவரும் தேதியிலிருந்து "இலங்கைச் சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் மன்றம்" என்பதனைப் பற்றிய குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) "இலங்கைச் சிறுகைத்தொழில் மன்ற (கூட்டிணைத்தல்) சட்டம்" என்பதன்கீழ் பதிவுசெய்யப்பட்ட கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து "இலங்கைச் சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் மன்ற (கூட்டி ணைத்தல்) சட்டம்" என்பதன்கீழ் பதிவுசெய்யப்பட்ட உறுப்பினர் களாக வாசித்துப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவை திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ), (எ), (ஏ), (ஐ), (ஒ), (ஓ), (ஔ), (க), (ங), (ச), (ஞ), (ட), அத்துடன் (ண) என்னும் பந்திகளுக்கு முறையே அப்பிரிவின் (ஏ), (ஐ), (ஒ), (ஓ), (ஔ), (க), (ங), (ச), (ஞ), (ட), (ண), (த), (ந), (ப), (ம), (ய), (ர) அத்துடன் (ல) என்னும் பிரிவுகளாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ;

(2) அதன் மீள இலக்கமிடப்பட்ட (ஏ) என்னும் பந்திக்கு நேர்முன்னர் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்து வதன் மூலமும் :-

(அ) தேசிய பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர அளவுக் கைத்தொழிற் துறையைப் பேணி வளர்த்தலும் ஊக்குவித்தலும் ;

(ஆ) கைத்தொழிற்துறை தொடர்பில் கொள்கையை வகுத்துத் தொகுத்தலில் அரசாங்கத்துடனும் இயைபான அரசாங்க நிறுவனங்களுடனும் ஒருங்கிணைதலும் அவற்றிற்கு உதவுதலும் ;

(இ) சிறிய மற்றும் நடுத்தர அளவுக் கைத்தொழிற் துறைக்கு உதவுவதற்கு அரச சார்பற்ற ஒழுங் கமைப்புகளுக்கு வசதியளித்தல் ;

(ஈ) கைத்தொழில் தொழில் முயற்சிகளின் அபிவிருத் திக்காக மூலதனச் சந்தைக்கு அணுக்கம் பெறுவ தும் உட்கட்டமைப்பு வசதிகளையும் அவசியமான ஏனைய உதவிகளையும் பெறுவதும் எப்படி என்பது பற்றி உறுப்பினர்களுக்கு மதியுரையும் உதவியும் அளித்தல் ;

(உ) கருத்தரங்குகள், வியாபாரச் சந்தைகள், பொருட் காட்சிகள் அத்துடன் கொள்வனவாளர்-விற்பனையாளர் கூட்டங்கள் என்பவற்றில் பங்கு பற்றுவதற்கு உறுப்பினர்களுக்கு அனுசரணை வழங்குதல் ;

(ஊ) உறுப்பினர்களின் தொழில்முயற்சி சார்ந்த ஆற்றல்களையும் கைத்தொழிற் தேர்ச்சிகளையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் உறுப்பினர்களுக்கு கருத்தரங்குகளையும் செயலமர்வுகளையும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் ஒழுங்கு செய்தல் ;

(எ) கிடைக்கப்பெற்றுள்ள உற்பத்தி ஆற்றலினதும் வசதிகளினதும் பயன்பாட்டை ஊக்குவித்தலும் அபிவிருத்தி செய்தலும், ஏற்றுமதித் தேவைப்பாடு களை ஈடுசெய்வதற்கு உற்பத்தி ஆற்றல்களை அதிகரித்தலும் அத்துடன் துணை ஒப்பந்தப் பரிவர்த்தனையை விசாலித்தலும் அபிவிருத்தி செய்தலும்;”.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்